# உன்னை நிர்மூலமாக்கினவர்களும், உன்னை பாழாக்கினவர்களும், உன்னை விட்டுப் புறப்பட்டு போவார்கள். 2 ஏசா 49 : 17

என்னை பாழாக்கி விட்டார்களே என்று அங்கலாய்க்கும் என் அன்பு சகோதரியே, சகோதரனே,

இன்று கண்ட எகிப்தியனை என்றுமே நீ இனி காண்பதில்லை.

இஸ்ரவேலைக் காக்கும் தேவன், உறங்கவில்லை, தூங்கவில்லை.–என்ற பாடல்களின் முகவரியினாலே உங்களை வாழ்த்துகிறேன்.

ஒரு வேளை உங்கள் வாழ்க்கையில் பல வருடங்களாக சத்துரு உங்களை நிர்மூலமாக்கிக் கொண்டும், பாழாக்கிக்கொண்டும் இருந்திருப்பான். அல்லது இந்த வருடத்தில்தான் அல்லது இந்த மாதத்தில்தான் அல்லது இந்த வாரத்தில்தான் அவன் தன்னுடைய வேலையை ஆரம்பித்திருப்பான். பயப்படவேண்டாம். கண் கலங்க வேண்டாம்.

**வேதம் சொல்கிறது.**

நாம் நிர்மூல மாகாதிருப்பது தேவனுடைய கிருபை– என்பதாக.

ஒரு விசை, உன் வாழ்க்கையை சிந்தித்துப் பார். உன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட புயலுக்கு, நீ அப்பொழுதே சின்ன பின்னமாய் போய் இருப்பாய் அல்லவா ? உன்னுடைய குடும்பம் அழிந்து போயிருக்குமல்லவா ? பின்பு,

**உன்னை காப்பாற்றியது யார் ?**<br>
**உன்னை தேற்றியது யார் ?**<br>
**உன்னை அரவணைத்தது யார் ?**<br>
**உன்னை ஆதரித்தது யார் ?**

இன்றைக்கு இருக்கும் கஷ்டத்தையே இவ்வளவு பெரிதாக எண்ணுவாயானால், உன்னுடைய உண்மையான கஷ்டம் உன்னை தொடர்ந்து இருந்திருக்குமானால் நீ எங்கே இருப்பாய் ?

**இதைத்தான் சங்கீதக்காரன் 124 ல் சொன்னார்.**

மனுஷர் நமக்கு விரோதமாய் எழும்பின போது, கர்த்தர் நமது பக்கத்தில் இராவிட்டால், கர்த்தர் தாமே நமது பக்கத்திலிராவிட்டால், அவர்கள் கோபம் நம்மேல் எரிகையில், நம்மை உயிரோடே விழுங்கியிருப்பார்கள். அப்பொழுது தண்ணீர்கள் நம்மேல் பாய்ந்து, வெள்ளங்கள், நமது ஆத்துமாவின் மேல் பெருகி, கொந்தளிக்கும் ஜலங்கள், நமது ஆத்துமாவின் மேல் புரண்டு போயிருக்கும் – என்பதாக.

ஆம் சகோதரனே, சகோதரியே,

**நம்மை அவர்களுடைய பற்களுக்கு இரையாக ஒப்புக் கொடாதிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**–என்று சங்கீதக் காரன் சொல்லும் வார்த்தையையே நாமும் சொல்லுவோம்.

இன்று வரையிலும், உன்னை நிர்மூலமாக்கினவர்களும், உன்னை பாழாக்கினவர்களும் உன்னை விட்டு புறப்பட்டு போவார்கள் என்பதாக வேதம் சொல்லுகிறது. இந்த துர்செய்கையை செய்தது யார் ?

உன் மாமி அல்ல, உன் கணவர் அல்ல, உன் மருமகள் அல்ல, உன் நண்பன் அல்ல, உன் உயர் அதிகாரி அல்ல, உன் வேலைக்காரன் அல்ல.

**பின் யார் ? அவர்களுக்குள் புகுந்த பிசாசு அல்லவா ?**

ஆட்களை நீ பகைக்காதே, வெறுக்காதே, துரத்தாதே, ஆனால், அவர்களுக்குள் புகுந்துள்ள பிசாசை நீ கட்டி ஜெபம் பண்ணு.

**இயேசு சொன்னார்,**

பூமியிலே நீங்கள் எவைகளை கட்டுவீர்களோ, அவைகள் பரலோகத்திலே கட்டப்படும்

பூமியிலே நீங்கள் எவைகளை கட்டவிழ்ப்பீர்களோ, அவைகள் பரலோகத்தில் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்.

ஆதலால், என் அன்பு சகோதரனே, சகோதரியே,

உங்களை நிர்மூலமாக்குகிற, பாழாக்குகிற சத்துருவை, இயேசுவின் நாமத்திலே கட்டுகிறேன், ஜெயிக்கிறேன் என உபவாச ஜெபத்துடன் உரிமை குரல் எழுப்புங்கள்.

பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்.

**உன்னை நிர்மூலமாக்கினவர்களும்,**<br>
**உன்னைப் பாழாக்கினவர்களும்,**<br>
**உன்னை விட்டு புறப்பட்டு போவார்கள்** – ஆமென்.